

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பனை ஆதரித்து சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பொதுமக்களிடம் கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர்.கார்த்திகேயனுக்கு ஆதரவாக ஆர்.எஸ்.புரம் பகுதி கழகத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கழக வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், நகர கழகச் செயலாளர் குட்டி (எ) சுதாகர் வால்பாறை, அம்பராம்பாளையம் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக தகவல் தொழில் பணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தே.மு.தி.க. வேட்பாளர் டாக்டர்.இளங்கோவனை ஆதரித்து தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. ஆட்டையாம்பட்டி, அதகப்பாடி உள்ளிட்ட கிராமங்களில் வாக்கு சேகரித்தார் .பரப்புரைக்கு வந்தவர்களுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் ஒன்றியச் செயலாளர் டி.எல்.காவேரி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர். சேட்டு,பேச்சாளர் டி.ஏ.ரவி, ஒன்றியக் கழக பொருளாளர் தண்டபாணி, முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர்கள் லட்சுமணன், பெரியசாமி, தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் குமார், தே.மு.தி.க. நகரச் செயலாளர் கேப்டன் சுரேஷ் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.

# களத்தில் இளைஞர் அணி

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.



உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி,
மதுரை தெற்கு மாவட்டம்.



போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்.



உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.



நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.



பல்லடம் சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்.



கூடலூர் சட்டமன்றத் தொகுதி,
நீலகிரி மாவட்டம்.



சூலூர் சட்டமன்றத் தொகுதி,
கோவை தெற்கு மாவட்டம்.